ISBN No: 978-81-920884-4-0

9788192088440

1

# வளர் தமிழ் ஆய்வு

12

யாதும் ஊரே

யாவரும் கேளிர்

IN - 09.05.2015,
10.05.2015.

பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2015**

68. லோ.சாந்தி 320
குறுந்தொகையில் பூக்கள்

69. செ. சாந்திகுமாரி 325
கதைகளின் வெற்றி : காணாமல் போன சிறுவர்கள்

70. ஜெ.போ.சாந்திதேவி 330
சங்க கால மகளிர்

71. ந.சிதம்பரம் 335
தாழை மதியவனின் 'ஜல சந்தி'

72. ச.சிவகாமி 339
அற இலக்கியங்களில் சமூகச் சிந்தனைகளும்
வாழ்வியல் நெறிகளும்

73. க.சிவனேசன் 344
புறநானூற்றில் நிலைபேறுடைய அறச் சிந்தனைகள்

74. க. சின்னமணி 349
குறுந்தொகை காட்டும் செவிலியின் உளநிலை

75. அ. சுகன்யா 354
நடுகல் வழிபாடும் பிரமலைக் கள்ளர் சமூகமும்

76. அ. சுகன்யா 359
சங்க இலக்கியம் காட்டும் கடற் போர்கள்

77. இரா. சுதரிசன் 363
திருப்புல்லாணி ஸ்ரீ ஆதி ஜகந்நாதப் பெருமாள் ஆலய
தல விருட்சத்தின் பெருமை

78. நெ.சுதா 368
திருமந்திரத்தில் குரு

79. ஜெ. சுந்தரபாண்டியன் 373
குழந்தைகளுக்கான பண்டைய பாட்டி மருத்துவ முறைகள்

80. அ. சுப்பிரமணியம் 378
பாமாவின் 'வன்மம்' : ஒரு பார்வை

81. கோ.சுப்புலெட்சுமி 383
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்களில் 'ஆடு'





82. ச.அ.சுஜா 388
தமிழ் மலையாளப் புதினங்களில் பெண் சித்திரிப்பு

83. ம.செங்கோல்மேரி 393
ஜெயமோகனின் 'பார்த்தீனியத்தில்' இழையோடும்
மாந்திரீக எதார்த்தவாதக் கூறுகள்

84. ஞா. செல்வகணபதி 398
தமிழ் இலக்கியங்களில் சிவன்

85. சு.செல்வராணி 403
சங்க இலக்கியப் பதிவுகளும் திருக்குறளும்-ஓர் ஆய்வு

86. சி.சொர்ணமாலா 408
வீரமாமுனிவரின் 'கொடுந்தமிழ் இலக்கணம்'
விவரிப்பு முறை

87. பி. தமிழ்ச்செல்வி 413
உயிர் வளம் காக்கும் காய கல்பப் பயிற்சி

88. ந.தமிழ்த்தெய்வம் 418
சிவ ஐந்தெழுத்தின் மகிமை

89. பா.தமிழரசி 422
சங்க இலக்கியங்களில் சுற்றுச்சூழல் பாதுகாப்புணர்வு

90. ஆ.தர்மராஜன் 427
கடல்சார் தமிழ்ப் புதினங்களில் முத்துக் குளித்தலின்
தொழில்நுட்பங்கள்

91. இர.தாமரைச்செல்வன் 432
சுரத்திடைக் கண்டோர் பார்வையில் உடன்போக்கு

92. தாயம்மாள் அறவாணன் 437
சிவகாமியம்மாள் என்ற பெண் கவிஞர்

93. சு.தாரா சுந்தரி 441
நாட்டுப்புற மக்களின் மருத்துவம் சார்ந்த பழமொழிகள்

94. த.தாழைச்செல்வி 446
பொதிகை மலை

95. சி. திரவியம் 451
சமண சமயத்தில் காணப்படும் சைவ வழிபாடு

## வீரமாமுனிவரின் 'கொடுந்தமிழ் இலக்கணம்' விவரிப்பு முறை

எழுத்து, சொல் என்னும் இரு தமிழ் இலக்கணங்களை இலத்தீன் மொழியில் விவரிக்கும் விளக்க இலக்கண நூல் கொடுந் தமிழ் இலக்கணம். எழுத்து, பெயரும் மாற்றுப் பெயரும், வினை, தொடர், பல்வகைப் பெயர்கள் என்னும் ஐந்து அதிகாரங்களைக் கொண்ட இதனை வீரமாமுனிவர் 1728-ஆம் ஆண்டு இயற்றினார். 1739-ஆம் ஆண்டு தரங்கம்பாடியில் இலத்தீன் மொழியில் அச்சேறிய இந்நூலைக் கிறிஸ்டோபர் ஹென்றி ஹார்ஸ்ட் (Christopher Henri Horst) என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அச்சேற்றினார். 1813- ஆம் ஆண்டு ஜார்ஜ் வில்லியம் மாஹன் (George William Mahon) என்பவர் ஆங்கிலத்தில் செம்மையாக மொழிபெயர்த்தார். இலக்கணத்தை விளக்குவதற்கு வீரமாமுனிவர் கையாண்டுள்ள 'விவரிப்பு முறை' இங்கு ஆராயப்படுகின்றது.

### நூல் இயற்றப்பட்டதன் நோக்கம்

கிறித்துவத்தைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்ட இயேசு சபை ஊழியர்களுக்குப் பேச்சுத் தமிழைக் கற்பிக்கும் பொருட்டு இதை எழுதியுள்ளதாக வீரமாமுனிவர் முன்னுரையில் குறிப்பிடுகிறார். இம்முன்னுரை ரோமாபுரி இயேசு சபையினருக்கு முனிவர் எழுதிய மடலில் காணப்படுகின்றது. இம்முன்னுரையின் இறுதிப் பகுதி வருமாறு :

"கிறித்துவச் சமயத் தந்தையர்களாகிய நீங்கள் போற்றத் தகுந்த ஆர்வத்துடன் குழந்தைகளைப் போன்று எளிமையாக பேச்சுத் தமிழைக் கற்பதற்குத் தகுந்தவர்களாக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். உங்கள் ஊழியத்திற்கு எனது இந்தச் சிறிய நூல் மிகவும் உதவியாக இருக்கும். இதிலிருந்து ஏதேனும் ஓர் உதவியைப் பெறமுடியும் என்று நீங்கள் நினைத்தால் நானும் உங்களைப் பின்பற்றி நல்ல அறுவடைக்காகத் திராட்சை தோட்டத்தில் சோம்பலின்றி உழைக்க முன்வருவேன். விடை பெறுகிறேன். மதுரை சபையிலிருந்து, 29 சனவரி 1928."

திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தஞ்சை போன்ற

முனைவர் சி.சொர்ணமாலா,
பாத்திமா கல்லூரி, மதுரை.



மாவட்டப் பகுதிகளின் பேச்சு வழக்குகள் இந்நூலின் தரவுகளாகப் பெரிதும் அமைந்துள்ளன. இப்பகுதிகளிலேயே முனிவரின் ஊழியம் அதிகமாக அமைந்திருந்ததாக இதிலிருந்து அறியமுடிகின்றது.

### கருத்துக்களுக்கு எண்ணிடுதல்

வீரமாமுனிவர் கொடுந்தமிழ் இலக்கணத்தில் எழுத்து, சொல், தொடர் ஆகிய இலக்கணங்களை ஐந்து அதிகாரங்களில் விவரிக்கின்றார். கொடுந்தமிழ் இலக்கணத்தின் இயல் பகுப்பும் இயல்களில் செய்திகளை அடக்கிக் கூறும் முறையும் தமிழ் இலக்கண நெறியிலிருந்து வேறுபட்டு மேலை நாட்டு இலக்கண நெறியைத் தழுவிக் காணப்படுகின்றன. இலக்கணக் கருத்து ஒவ்வொன்றையும் வரிசை எண் கொடுத்து எண்ணிக்கையால் விவரிக்கின்றார். நூல் முழுவதுமாக 200 கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு எண்ணிட்டுக் கூறுவது முன்னும் பின்னும் இடம்பெறுகின்ற கருத்துக்களை ஒத்துப் பார்ப்பதற்கும் கூறியது கூறல் இன்றிச் சுருக்கமாகக் கருத்துக்களைக் கூறுவதற்கும் பயன்படும் ஒரு விவரிப்பு முறையாகும்.

### சொற்கள் பெயரிடல் முறை

வீரமாமுனிவர் இலக்கணக் கூறுகளை மேலை நாட்டு மொழிகளின் மரபுப்படி வகைப்படுத்தி விவரிக்கின்றார். எனவே, அதிகாரங்களுக்கும் உட்பிரிவுகளுக்கும் இலத்தீன் மொழிச் சொற்களிலேயே பெயரிட்டுள்ளார். இலத்தீன் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் சில ஐகாரக் குறுக்கம், இறந்த காலம், நிகழ் காலம், வேற்றுமை, எதிர்மறை என்பன போன்று தமிழிலும், தொடர்ந்து வேற்றுமை - Véttumei என்பது போன்று தமிழ்ச் சொற்கள் அரிதாக இலத்தீனில் ஒலி பெயர்க்கப்பட்டும் குறிக்கப்பட்டுள்ளன.

### எடுத்துக்காட்டுகள்

கொடுந்தமிழ் இலக்கணம் பேச்சுமொழியின் அமைப்பை விவரிக்கும் நூலாதலால், இலக்கணச் செய்திகளுக்குப் பேச்சு வழக்கில் உள்ள சொற்களையே முனிவர் எடுத்துக்காட்டுகிறார்.

| | | |
|---|---|---|
| எ.கா: | செய்-குது | : செய்கிறது |
| | இத்தோடு | : இதனோடு |
| | இத்தால் | : இதனால் |